| | | |
|---|---|---|
| வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம் | | |
| மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018 | | |
| தரம் - 6 | செய்முறைத் தொழில் நுட்பத்திறன் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

சுட்டெண் :- ..............................

## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. மூடுபடையாக பயிர்செய்யக்கூடிய தாவரங்கள்
    1) கத்தரி, மிளகாய், வெண்டி
    2) வல்லாரை, நிலக்கடலை, வற்றாளை
    3) பூசணி, பாகல், புடோல்
    4) வாழை, மரவள்ளி, இரசவள்ளி

02. அலங்காரமான இலைத் தாவரங்கள்
    1) சீனியாஸ், அந்தூரியம், ஒக்கிட்டு
    2) மணிவாழை, அலாமந்தா, ஜொப்ரா
    3) கோலியாஸ், சேம்பு, குரோட்டன்
    4) போகன்விலா, டெய்லியா, ஜெரனியம்

03. வீட்டுத்தோட்டத்திற்கு வண்ணாத்துப் பூச்சிகளை வரவழைக்க பயிரிடப்படும் பூப்பயிர்
    1) செவ்வந்தி 2) சூரியகாந்தி 3) பாலோலியா 4) பாத்தீனியம்

04. நாற்றுக்களை சாடிக்கு சாடி மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில் பொருத்தமற்றது.
    1) தாவரவேர் சாடிக்கு வெளிவரும் போது
    2) தாவரங்கள் வளர்ப்பதற்கு சாடியில் இடவசதி இல்லாத போது
    3) தாவரம் இலைத்தளிர்களுடன் நன்றாக வளரும் போது
    4) பசளைகளை உபயோகித்த போதும் தாவரங்கள் வளர்ச்சியை காட்டாத தன்மை

05. வீட்டுத்தோட்ட மண்ணை தூர்வையாக்கும் செயற்பாட்டை செய்யும் பிராணி
    1) எலி 2) மண்புழு 3) களவொத்தா 4) எறும்பு

06. துண்டாக்க அல்லது வேறாக்க பயன்படும் உபகரணம் அல்லாதது
    1) வெட்டும் உளி
    2) தகடு வெட்டும் கத்தரி
    3) பற்றாசுக்கோல்
    4) கைக்குறடு





07. உணவுக்கூம்பகத்தின்படி குறைவாக உட்கொள்ள வேண்டிய உணவு வகை?
    1) தானியங்கள், கிழங்கு வகைகள்
    2) பழவகைகள்
    3) கொழுப்பும் சீனியும்
    4) மீன், முட்டை, இறைச்சி, பருப்பு வகைகள்

08. நாம் உயிர்வாழத் தேவையானவை (அவசியமானவை)
    1) தேவைகள் 2) விருப்பங்கள் 3) பொருட்கள் 4) சேவைகள்



kalvi.lk

09. நீளம், அகலம், உயரம் கொண்ட உருவம்




1)  2)  3)  4) 

10. உணவு பழுதடைதலில் செல்வாக்கு செலுத்தும் பௌதீக காரணி

1) ஈஸ்ட் 2) வெப்பநிலை

3) பூஞ்சனம் 4) பற்றீரியா

11. பின்வருவனவற்றில் முறைசார வடிவம் யாது?

1)  2)  3)  4) 

12. போசணைத் தரம் கொண்ட புதிய மீனின் இயல்புகளில் ஒன்று

1) விரலால் அழுத்தும் போது குழி விழுதல்

2) பிரகாசமற்ற கண்

3) பிரகாசமான கண்

4) வாலில் பிடித்துத் தூக்கும் போது வளைதல்

Education கல்வி

13. வீட்டுத் தோட்டப் பயிர்களில் காணப்படும் நோய்ப்பீடைகளைப் புகையூட்டல் மூலம் கட்டுப்படுத்தப்பயன்படும் பொருள்

1) மரமுந்திரிகைகளின் மேற்றோல் 2) பழைய குப்பைக்கூளங்கள்

3) வைக்கோல் 4) பொச்சு மட்டை

14. இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் ஒன்றாக கொள்ளத்தக்கது

1) நீதிமன்றங்கள் 2) தனியார் வைத்திசாலை

3) நவீன சந்தைத் தொகுதி 4) வர்த்தக வங்கிகள்

15. சந்தையில் காணப்படும் தயாரிக்கப்பட்ட உணவிற்கு உதாரணமாக அமைவது

1) நூடில்ஸ் 2) தேயிலை 3) அரிசிமா பைக்கற் 4) குரக்கன்

16. இயற்கைப் பீடை நாசினி

1) யூரியா 2) குளோரின்

3) புகையிலைச்சாயம் 4) கிரமக்கோன்




kalvi.lk

17. ஸ்டென்சில் உருவாக்கப் பயன்படுவது

1) மெல்லிய கடதாசி மட்டை
2) கண்ணாடித்துண்டுகள்
3) எக்ஸ்ரே கடதாசி
4) A3 கடதாசி

18.



பின்வரும் பயன்பாட்டில் உள்ள குறியீடு?

1) சமையல் அறைச் சுவர்
2) சமையல் அறை யன்னல்
3) சமையலறைக் கதவு
4) உணவு சமைப்பதற்கு முன் தயாரிக்கும் அலகு

19. சுட்டுத்துண்டில் காணப்படாதது

1) உள்ளடங்கியுள்ள பொருளின் நிறை
2) உணவின் சுவை
3) பல்வேறு தரச் சான்றிதழ்கள்
4) போசணை தொடர்பான விபரங்கள்

20. பற்றாசுக் கோலின் முனை எவற்றால் ஆக்கப்பட்டுள்ளது?

1) செப்பு உலோகம் 2) வெண்கலம் 3) இரும்பு 4) நாகம்

(20x1 = 20 புள்ளிகள்)

Education கல்வி

## பகுதி I

❖ **முதலாம் வினா உட்பட ஏனையவற்றில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01.

1) செய்முறைத்தொழிநுட்ப பாடத்தில் செய்த கணிப்பீட்டின் வகை யாது?
2) அவற்றுக்கு நீங்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் பொருட்களையும் பட்டியல் படுத்துக.
3) செயற்பாட்டில் நீர் பெற்ற அனுபவங்கள் எவை?
4) செயற்பாட்டின் போது உமக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் எவை?

(1+3+3+3 =10 புள்ளிகள்)

02.

1) வீட்டுத்தோட்டத்திற்கு வரும் விருந்தினர்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவை வாழக்கூடிய இடங்களையும் தருக?
2) பாடசாலைத் தோட்டத்திற்கு வரும் உயிரினங்களால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக?
3) வீட்டுத்தோட்டத்திற்கு வரும் விருந்தாளரை உபசரிக்கும் முறைகள் இரண்டு தருக?



kalvi.lk

03.

1) உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

2) உணவைப் பாதுகாக்கும் முறைகள் நான்கு தருக?

3) உணவை நீண்ட காலம் வைத்திருக்க பின்பற்றக்கூடிய எளிய முறைகள் இரண்டினை உதாரணத்துடன் தருக?

04.

1) அலங்கார கேக் பொதியொன்றினை செய்வதற்குத் தேவையான பொருட்கள் உபகரணங்களைத் தருக?

2) அலங்கார கேக் பொதியொன்றிற்கான படத்தை வரைந்து நிறம் தீட்டுக.?

3) குண்டூசி தாங்கி செய்வதற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் எவை?

05.

1) சுயதொழில் முயற்சிகள் மூலம் மனிதன் பெறும் அனுகூலங்கள் மூன்று தருக?

2) முதலீடு செய்வதற்கு ஏற்ற நிறுவனங்கள் மூன்று தருக?

3) மூலப்பொருள் செலவைக் குறைத்துக் கொள்ளக்கூடிய முறைகள் இரண்டு தருக?

06.

1) முப்பரிமாணத் தோற்ற வரைதல் பாவிக்கப்படுவதன் நோக்கம் யாது?

2) முப்பரிமாணத் தோற்றத்தின் மூலம் காட்டப்படுவது எவை?

3) முப்பரிமாணத்தைக் காட்டும் வடிவம் ஒன்றை வரைந்து காட்டுக?

Educational கல்வி அධ්‍යාපන

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page